23-07-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா''

இன்று அனைத்து பிராப்திகளையும் கொடுக்கக்கூடிய பாப்தாதா தங்களுடைய நாலாபுறங் களிலும் உள்ள பிராப்திகள் நிறைந்த குழந்தைகளை பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். அனைத்து பிராப்திகளின் வள்ளல் சம்பன்னமான மற்றும் சம்பூரணமான தந்தையின் குழந்தை கள் ஆவீர்கள் ஆதலால், ஒவ்வொரு குழந்தைக்கும் தந்தை அனைத்து பிராப்திகளின் ஆஸ்தியைக் கொடுத்துள்ளார். சிலருக்கு 10 கொடுக்கப்பட்டுள்ளது, சிலருக்கு 20 கொடுக்கப் பட்டுள்ளது - இப்படி கிடையாது. அனைத்து குழந்தைகளுக்கும் அனைத்து பிராப்திகளின் அதிகாரத்தைக் கொடுத்திருக்கின்றார். அனைத்து குழந்தைகளும் முழு ஆஸ்தியின் அதிகாரி கள் ஆவீர்கள். ஒவ்வொரு அதிகாரி குழந்தையும் தனக்குள் பிராப்திகளின் அதிகாரத்தை எந்தளவு அடைந்திருக்கின்றார்கள் என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். தந்தை அனைத்தையும் கொடுத்திருக்கின்றார். தந்தையை சர்வசக்திவான் மற்றும் நிறைந்திருக் கும் கடல் என்று அழைக்கின்றோம். ஆனால், குழந்தைகள் அந்தப் பிராப்திகளை எந்தளவு தனதாக ஆக்கியிருக்கின்றார்கள்? தந்தையால் கொடுக்கப்பட்ட ஆஸ்தியை எப்பொழுது தனதாக ஆக்கிவிடுகின்றார்களோ, அந்தளவு என்னுடைய பொக்கிஷம் என்ற போதை மற்றும் குஷி உள்ளது. கொடுத்ததோ தந்தை, ஆனால், தனக்குள் தாரணை செய்து தனதாக்கிவிட்டீர்கள். ஆக என்ன பார்த்தார்கள்? தனதாக ஆக்கு வதில் வரிசைக்கிரமம் ஆகிவிட்டீர்கள். தந்தை வரிசையை உருவாக்கவில்லை, ஆனால், அவரவர் தாரணையின் யதா சக்தியானது வரிசைக்கிரமமாக ஆக்கிவிட்டது. சம்பூரண அதிகாரம் மற்றும் சர்வ பிராப்திகளிலும் நிறைந்த ஆத்மா, யார் சதா அமிர்தவேளையில் இருந்து இரவு வரை பிராப்திகளின் போதை மற்றும் அனுபவத்தில் இருக்கின்றார்களோ, அவர்களுடைய அடையாளம் என்னவாக இருக்கும்? பிராப்திகளின் அடையாளம் திருப்தி ஆகும். அவர்கள் சதா திருப்திமணி ஆகி அனைவருக்கும் திருப்தி யினுடைய ஒளியின் அதிர்வலைகளை பரப்பிக் கொண்டே இருப்பார்கள். அவர்களுடைய முகம் சதா மகிழ்ச்சியாகத் தென்படும். மகிழ்ச்சியான உள்ளம் உடையவர் என்றால் அனைத்து கேள்விகளில் இருந்து விடுபட்டவர் என்று அர்த்தம். எந்த கேள்வியும் இருக்காது, மகிழ்ச்சி இருக்கும். ஏன், என்ன, எப்படி - இவை அனைத்தும் சமாப்தி ஆகியிருக்கும். அத்தகைய மகிழ்ச்சி யானவர் ஆகியிருக்கின்றீர்களா? அல்லது இப்பொழுதும் கூட இது என்ன, இது ஏன், இது எப்படி நடக்கும், எப்பொழுது நடக்கும்? என்பது போன்ற கேள்விகள் அவ்வப்போது எழுகின்றனவா? இந்தக் கேள்வி மனதிலோ, பிறராலோ எழுகின்றதா? கேள்வி நிறைந்த உள்ளம் உடையவர்களா அல்லது மகிழ்ச்சியான உள்ளம் உடையவர்களா? அல்லது அவ்வப்போது கேள்வி நிறைந்த உள்ளம் உடையவராக, அவ்வப்போது மகிழ்ச்சி யானவராக இருக்கின்றீர்களா? என்னவாக இருக் கின்றீர்கள்? பிராமணர்களின் பொக்கிஷத்தில் எந்தவொரு பொருளின் அபிராப்தி கிடையாது என்ற மகிமை உள்ளது. இது யாருடையது, எந்த பிராமணர்களுடைய மகிமை இது? உங்களுடையதா அல்லது அடுத்து வரப்போகிறவர்களுடையதா? உங்களுடையது தானே! ஏதாவது அபிராப்தி ஏற்படுகிறது அல்லவா, அதிருப்திக்கான காரணம் அபிராப்தி ஆகும். எப்பொழுதாவது மனம் அதிருப்தி ஆகிறது என்றால் அதற்கான காரணம் என்ன? என்று தன்னுடைய அனுபவத்தைப் பாருங்கள். ஏதாவது அபிராப்தியை அனுபவம் செய்கின்றீர்கள், ஆதலால் அதிருப்தி ஏற்படுகிறது. எந்தப் பொருளின் அபிராப்தியும் இல்லை என்ற மகிமை உள்ளது. இது இப்போதைய மகிமையா அல்லது வினாச சமயத்திற்கானதா? வினாசத்தின் சமயத்தில் சம்பன்னம் ஆகுவீர்களா அல்லது இப்பொழுதே ஆகவேண்டுமா? நான் சதா மகிழ்ச்சியான உள்ளம் உடையவராக இருக்கின்றேன், ஒருபொழுதும் எந்தவொரு விசயத்திலும், அது தன்னுடைய சம்பந்தத்திலோ, பிறருடைய சம்பந்தத்திலோ கேள்வி எழுவதில்லை, சதா திருப்தியாக இருக்கின்றேன் என்று யார் நினைக்கின்றீர்களோ - அப்பேற்பட்ட திருப்தியான ஆத்மாக்கள் எத்தனை பேர் இருப்பீர்கள்? நிறைய பேர் இருக்கின்றீர்கள்! நல்லது, சதா மகிழ்ச்சி யாக இருக்கின்றேன், மாயை எவ்வளவு தான் அசைக்கட்டும், ஆனால், நான் அசைவதில்லை, மாயையை அசைத்துவிடுகிறேன், மாயை நமஸ்காரம் செய்கிறது, நான் அங்கதனாக இருக்கின்றேன், மாயை தோல்வி அடைந்துவிடுகிறது, ஆனால், நான் வெற்றியாளராக இருக்கின்றேன் என்று நினைப்பவர்கள் யார் இருக்கின்றீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். சதா என்ற வார்த்தையை நினைவில் வைக்க வேண்டும், அவ்வப்போது என்ற வார்த்தையை

அல்ல. மிகவும் குறைவானவர்களே இருக்கின்றீர்கள், கோடியில் ஒருவராக இருக்கின்றீர்கள்! கேள்விக்குறி எழுகிறது அல்லவா. கேள்விக்குறி டிக்ஷனரியில் இருந்து நீங்கிவிட வேண்டும். தடுமாற்றமும் கூடாது. கம்ப்யூட்டரை இயக்கும்பொழுது அதில் வருகிறது அல்லவா? உங்களுடைய புத்தி என்ற கம்ப்யூட்டரில் சதா முற்றுப்புள்ளி என்ற குறி தான் வரவேண்டும். கேள்விக்குறி, ஆச்சரியக்குறி முடிந்து போக வேண்டும். இதையே சதா மகிழ்ச்சியான நிலை என்று கூறப்படுகிறது. அப்பேற்பட்ட மகிழ்ச்சியான உள்ளம் உடையவர்கள் பிறருடைய கேள்விக்குறியையும் முடித்துவிடுகிறார்கள். இல்லையென்றால், தன்னிடத்தில் ஒருவேளை கேள்விக்குறி உள்ளது என்றால் எந்தவொரு விசயத்தைக் கேட்டாலும், பார்த்தாலும் -ஆம், இது நடந்திருக்கக் கூடாது, ஆனால் நடந்துவிடுகிறது, இது நடக்கக்கூடாது என்று நானும் புரிந்திருக் கிறேன் என்று கூறுவார்கள், இருவரும் ஒன்று சேர்ந்துவிடுகின்றார்கள். அவர்களுடைய கேள்விக்கு இன்னும் அதிக அடிக்கோடிடு வார்கள். ஆம், இது சரியல்ல, ஆனால் நடந்துவிடு கிறது . . . என்று கூறுகின்றீர்கள் என்றால் அவர்களுக்கு ஆதரவு அளித்துவிட்டீர்கள் அல்லவா. அவர்களை மகிழ்ச்சியானவராக ஆக்கவில்லை, ஆனால், கேள்வியை இன்னும் அதிகப்படுத்தி இருக்கின்றீர்கள். கூடுதல் ஆகிவிட்டது. ஒருவருடைய கேள்வியாக இருந்தது, இப்பொழுது இருவருடையதாக ஆகிவிட்டது, இருவரில் இருந்து நால்வருடையதாக ஆகிவிடும். எனவே, மகிழ்ச்சியான உள்ளத்தின் அதிர்வலைக்கு பதிலாக கேள்வி நிறைந்த உள்ளத்தின் அதிர்வலை விரைவாகப் பரவுகிறது. ஆம்! அப்படியா! . . . என்றால் துணை போய்விட்டீர்கள். அப்படியா! என்ற ஆச்சரியக்குறி வந்துவிட்டது அல்லவா. முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை அல்லவா. தனக்காவும் - எனக்கு இது நடந்திருக்கக்கூடாது, எனக்கு இது கிடைக்க வேண்டும், இது பிறருக்கு நடந்திருக்கக்கூடாது என்று நினைக்கின்றனர். இந்த கூடாது மற்றும் வேண்டும், வேண்டும் என்பது கேள்வி நிறைந்தவராக ஆக்கிவிடுகிறது, மகிழ்ச்சியானவராக அல்ல. எனவே, அனைவருடைய இலட்சியம் என்ன? திருப்தியான, மகிழ்ச்சியான உள்ளம் உடையவர் ஆகுவது.

யாரிடம் மகிழ்ச்சி உள்ளதோ, அவர்களுடைய மனம், புத்தியினுடைய வீணானவற்றின் வேகம் தீவிரமாக இருக்காது. சதா நிர்மலமாக, பணிவாக இருக்கும். பணிவு இருக்கும் காரணத்தினால் அனைவருக்கும் தனது மகிழ்ச்சியின் நிழலில் குளிர்ச்சியை அளிப்பார்கள். எப்பேற்பட்ட நெருப்புக்கு சமமாக எரிந்து கொண்டிருக்கும், மிகவும் சூடான புத்தி உடையவராக இருக்கட்டும், ஆனால், மகிழ்ச்சியின் அதிர்வலையினுடைய நிழலில் குளிர்ச்சி அடைந்துவிடுவார்கள். பலவீனம் என்ன வருகிறது? சரியாகத் தான் நடக்கிறீர்கள், தனதளவில் நன்றாக நடக்கிறீர்கள், ஆனால், எப்பொழுது சம்பந்தம் தொடர்பில் வருகின்றீர்களோ, அப்பொழுது பிறருடைய பலவீனத்தை பார்த்து, கேட்டு, வர்ணனை செய்து பிரபாவத்தில் வந்துவிடுகின்றீர்கள். பிறகு, இவர்கள் செய்தார்கள் அல்லவா, ஆகையினால், என்னாலும் நடந்துவிட்டது, இவர் சொன்னார், ஆகையினாலேயே நான் சொன்னேன். அவர் 50 முறை சொன்னார், நான் ஒரு முறை சொன்னேன் என்று கூறுகின்றீர்கள். பிறகு, தந்தைக்கு முன்னாலும் மிகவும் இனிமையிலும் இனிமையான விசயங்களைச் சொல்கின்றீர்கள். எதுவரை இந்தளவு பொறுத்துக் கொள்ள முடியும் என்பதை நீங்களும் புரிந்துகொள்ளுங்களேன் பாபா! பிறகும் கூட முயற்சியாளர் தானே, கொஞ்சம் வரத்தானே செய்யும் என்று கூறுகின்றார்கள். தந்தைக்கே புரியவைக்க ஆரம்பித்து விடுகின்றார்கள். இங்கே யார் நிமித்தமாக இருக்கின்றார்களோ, அவர்களிடம் நிறைய கதைகள் சொல்கின்றார்கள். அப்படி இருந்தது அல்லவா, அப்படி இருந்தது அல்லவா, அப்படி இருந்தது அல்லவா . . . அப்படி, அப்படி என்ற மாலையை ஜெபிக்கின்றார்கள். அப்பேற் பட்ட விசயங்களை இரண்டு வார்த்தைகளில் வர்ணனை செய்யுங்கள். நீளமான வர்ணனை செய்யாதீர்கள் என்று பாப்தாதா சதா சமிக்ஞை கொடுக்கின்றார்கள். ஏனென்றால், இந்த நீளமான விசயங்கள் மிகவும் காரசாரமாக இருக்கின்றன. சுவையானதாகத் தோன்றுகின்றன. எவ்வாறு உணவில் கூட புளிப்பான,

இனிப்பான பொருள் இருக்கிறது என்றால் நன்றாக இருக்கும் அல்லவா, மேலும், காரசாரமற்றதாக சாதாரணமானதாக இருந்தது என்றால் இதை சாப்பிட்டுக் கொண்டே தானே இருக்கின்றோம் என்று கூறுவார்கள். எனவே, வீணான விசயங்கள், வீணான சிந்தனையை கேட்பது, பேசுவது மற்றும் செய்வது, இவற்றில் போகப் போக ஆர்வம் அதிகரித்து விடுகிறது. பிறகு, நானோ விரும்பவில்லை, ஆனால், அவர்கள் சொன்னார்கள் அல்லவா என்று நினைக்கின்றனர். நல்லது அவர்களுடையதைக் கேட்டு, அவர்களுடைய உள்ளத்தை காலி செய்துவிடலாம் என்று நான் கேட்டேன் என்று கூறுகின்றார்கள். ஆனால், அவர்களுடைய உள்ளமோ காலியாகி விட்டது மற்றும் நீங்கள் உள்ளத்தை நிறைத்துக் கொண்டீர்கள். அது கொஞ்சம் கொஞ்சமாக உள்ளத்தில் நிறைந்து நிறைந்து சமஸ்காரம் ஆகிவிடுகிறது, மேலும், எப்பொழுது சமஸ்காரம் ஆகிவிடுகிறதோ, பிறகு, இது தவறானது என்ற உணர்வே ஏற்படுவ தில்லை. இந்த வீணான சமஸ்காரம் புத்தியினுடைய நிர்ணயசக்தியை அழித்துவிடுகிறது. ஆகையினால், அனைத்தையும் விட சகஜமான சதா திருப்தியாக இருப்பதற்கான விதி என்னவென்றால் சதா தனக்கு முன்னால் ஏதாவது ஏதாவது விசேஷ பிராப்தியை வைத்திடுங் கள். ஏனெனில், பிராப்தியானது மறந்து போகாது. ஞானத்தின் பாயிண்ட்ஸ் மறந்து போகலாம், ஆனால், எந்த ஒரு பிராப்தியும் மறந்து போகாது. தந்தையிடம் இருந்து என்னென்ன கிடைத்துள்ளன, எவ்வளவு கிடைத்துள்ளன, பல வகைகளை விரும்புகிறீர்கள் அல்லவா! ஒரே மாதிரியாக இருப்பதை விரும்புவதில்லை. எனவே, நீங்கள் தன்னுடைய பிராப்திகளைப் பாருங்கள் - ஞான பொக்கிஷத்தின் பிராப்தி எவ்வளவு உள்ளது, யோகத்தினால் சக்திகளின் பிராப்தி எவ்வளவு உள்ளது, தெய்வீக குணங்களின் பிராப்திகள் எவ்வளவு உள்ளன, நடைமுறையில் போதையில், குஷியில் இருப்பதன் பிராப்திகள் எவ்வளவு உள்ளன? பெரிய பட்டியல் உள்ளது அல்லவா! சில நேரம் ஏதாவது ஒரு குணம், சில நேரம் மற்றொரு குணம், இப்படி ஏதாவது ஒரு குணத்தின் பிராப்தியை முன்னால் வைத்து திருப்தியாக இருங்கள் என்று முன்னதாகவே சொல்லப்பட்டது. எவ்வாறு விகாரங்களுக்குள் ஒன்றுக் கொன்று மிகவும் ஆழமான சம்பந்தம் உள்ளதோ, ஒருவேளை, வெளிப்படையான ரூபத்தில் கோபம் உள்ளது, ஆனால், உள்ளத்தில் சோதித்தீர்கள் என்றால் கோபத்தின் கூடவே ஆசை, அகங்காரம் இருக்கவே செய்கிறது. இவை அனைத்தும் தங்களுக்குள் நண்பர்கள். சில வெளிப்படையான ரூபத்தில் இருக்கின்றன, சில மறைமுகமான ரூபத்தில் இருக்கின்றன. இதைப் போன்றே குணங்கள் என்ன வெல்லாம் இருக்கின்றனவோ, அவையும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டுள்ளது. ஒரு குணத்தை வெளிப்படையாக வைத்துக் கொள்ளுங்கள், ஆனால், மற்ற குணங்களும் அதன் கூடவே மறைமுகமான ரூபத்தில் இருக்கும். எனவே, தினமும் ஏதாவது பிராப்தி சொரூபத்தின் அனுபவத்தை அவசியம் செய்திடுங்கள். ஒருவேளை, பிராப்தி வெளிப்படையான ரூபத்தில் இருந்தால், பிராப்திக்கு முன்னால் அபிராப்தி அழிந்துவிடும் மேலும், சதா திருப்தியாக இருப்பீர்கள். பாருங்கள், உலகத்திலும் முக்கியமான பிராப்தியாக அனைவரும் என்ன விரும்புகின்றார்கள்?

தனக்கு நல்ல பெயர் கிடைக்க வேண்டும், இரண்டாவது மதிப்பு மற்றும் மூன்றாவது புகழ் கிடைக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் விரும்புகின்றார்கள். பெயர், மதிப்பு, புகழ் - இவற்றை அடைய விரும்பு

கின்றார்கள். நீங்கள் கூட என்ன விரும்புகின்றீர்கள்? நீங்களும் இதையே விரும்புகின்றீர்கள் அல்லவா! எல்லைக்குட்பட்டதாக அல்லாமல் எல்லைக்கப்பாற் பட்டதை விரும்புகின்றீர்கள். உலகத்தினர் எல்லைக்குட்பட்ட பெயருக்கு பின்னால் ஓடு கின்றார்கள். மேலும், உங்களுடைய பெயர் உலகத்தில் எவ்வளவு உயர்ந்ததாக உள்ளதோ, அந்தளவு வேறு எவருக்கும் உள்ளதா? எனவே, நீங்கள் தன்னுடைய பெயரைப் பாருங்கள். அனைத்தையும் விட பெயரின் சிறப்புத்தன்மை இதுவே ஆகும் - உங்களுடைய பெயரை யார் ஜெபிக்கின்றார்கள்? சுயம் பகவான் உங்களுடைய பெயரை ஜெபிக்கின்றார்! எனில், இதை விட பெரிய பெயர் என்ன இருக்க முடியும்! உங்களுடைய பெயரில் இப்பொழுது இறுதி பிறவியிலும் கூட அனேக ஆத்மாக்கள் தங்களுடைய சரீர நிர்வாகத்தை செய்து கொண்டு இருக்கின்றார்கள். நீங்கள் பிராமணர்கள் அல்லவா, பிராமணர் என்ற பெயரில் இன்றும் கூட பெயரளவு பிராமணர்கள் எவ்வளவு வருமானம் செய்து கொண்டு இருக்கின்றார்கள்! இப்பொழுது வரை பெயரளவு பிராமணர்கள் கூட எவ்வளவு உயர்வாக மகிமை செய்யப்படுகின்றார்கள்! உங்களுடைய பெயருக்கு எவ்வளவு மகிமை உள்ளது! இவ்வளவு சிரேஷ்டமான பெயர் உங்களுடையது, ஆகையினால், எல்லைக்குட்பட்ட பெயருக்கு பின்னால் செல்லாதீர்கள். என்னுடைய பெயரை ஒருபொழுதும் எந்த விசயத்திலும் எடுப்பதில்லை, என்னுடைய பெயர் சதா பின்னால் தான் உள்ளது, சேவை நான் செய்கின்றேன், பெயர் பிறருக்கு கிடைத்துவிடு கின்றது, . . . இவ்வாறு எல்லைக்குட்பட்ட பெயருக்கு பின்னால் செல்லாதீர்கள். தந்தையின் உள்ளத்தில் உங்களுடைய பெயர் எப்பொழுதுமே சிரேஷ்டமாக உள்ளது. எப்பொழுது தந்தையின் உள்ளத்தில் பெயர் வந்துவிட்டதோ, பிறகு ஏதாவது ஒரு சேவையில், ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் அல்லது ஏதாவது விசயங்களில் உங்களுடைய பெயர் வரவில்லை என்றால் என்ன, தந்தையிடத்தில் உள்ளது அல்லவா! எவ்வாறு பக்தி மார்க்கத்தில் அனுமனுடைய சித்திரத்தைக் காண்பிக்கின்றார்கள் அல்லவா. அவருடைய உள்ளத்தில் என்ன இருந்தது? இராமர் இருந்தார். மேலும், தந்தையின் உள்ளத்தில் என்ன உள்ளது? (குழந்தைகள்) எனில், குழந்தைகளில் நீங்கள் இருக்கின்றீர்களா அல்லது இல்லையா? அனைவருடைய பெயர் உள்ளது! பார்த்திருக்கிறீர்களா? பக்காவா? எப்பொழுதாவது தவறி (மிஸ்ஸாகி) இருந்தால்! உங்கள் அனைவருடைய பெயரும் உள்ளது! எனவே, இன்னும் பெயருக்கு பின்னால் ஏன் போகின்றீர்கள்? ஏனெனில், பெரும்பான்மையாக இந்தப் பெயர், மதிப்பு, புகழ் கீழே விழவைக்கவும் செய்கின்றது மற்றும் இதே பெயர், மதிப்பு, புகழ் போதையையும் ஏற்றிவிடுகிறது. எனவே, பிராப்தியின் ரூபத்தில் பாருங்கள். ஒருவேளை, ஏதாவது ஒரு காரணத்தால் உங்களுடைய பெயர் மறைந்துள்ளது என்று வைத்துக் கொள்ளுங்கள் மற்றும் என்னுடைய பெயர் வர வேண்டும் என்று நீங்கள் நினைப்பது யதார்த்தமானது, ஆனாலும், ஒருவேளை, ஒரு ஆத்மா வுடன் கணக்கு வழக்கு இருக்கும் காரணத்தினாலோ அல்லது அவருடைய சமஸ்காரத்தின் காரணத்தினாலோ, உங்களுடைய பெயர் வரவில்லை, நீங்கள் சரி, அவர்கள் தவறு, ஆனாலும் அவர்களுடைய பெயர் வெளிப்படுகிறது, உங்களுடையது வெளிப்படவில்லை, எனில், வெற்றி மாலையில் உங்களுடைய பெயர் உறுதியாக உள்ளது. ஆகையினால், இதையும் பொருட்படுத் தாதீர்கள். இந்த ரூபத்தில் மாயை அதிகமாக வருகின்றது. ஆகையினால், இப்பொழுது தவறுதலாக பெயர் மிஸ் ஆகிவிட்டது என்றால் பரவாயில்லை, ஆனால், வெற்றிமாலையில் உங்களுடைய பெயர் மிஸ்

ஆகாது.. முதலில் உங்கள் பெயர் இருக்கும். எனவே, தன்னுடைய பெயரின் மகிமையை நினைவில் வைத்திடுங்கள் - என்னுடைய பெயர் தந்தையின் உள்ளத்தில் உள்ளது, வெற்றி மாலையில் உள்ளது, இறுதி வரை என்னுடைய பெயர் சேவை செய்து கொண்டு இருக்கின்றது.

மேலும், உங்களுடைய மதிப்பு எவ்வளவு? பகவான் கூட உங்களை தனக்கு முன்னால் வைத்திருக்கின்றார்! முதலில் குழந்தைகள். எனில், சுயம் தந்தை மதிப்பு கொடுத்துவிட்டார். உங்களுடைய மதிப்பு எந்தளவு உள்ளது, அதனுடைய நிரூபணம் பாருங்கள் உங்களுடைய ஜடசித்திரங்களுக்குக் கூட இறுதிப் பிறவி வரை எவ்வளவு மதிப்பு உள்ளது! அறிந்துள்ளார் களோ, அறியவில்லையோ, ஆனால், எந்தவொரு தேவி, தேவதையின் சித்திரமாக இருந்தாலும், எவ்வளவு மதிப்போடு அதை பார்க்கின்றார்கள்! அனைத்தையும் விட சிரேஷ்மான மதிப்பு உங்களுடைய சித்திரங்களுக்கும் உள்ளது. இது நிரூபணம் ஆகும். உங்களுடைய சித்திரங்களே இவ்வளவு மதிப்பிற்குரியதாக, பூஜைக்குரியதாக உள்ளன, பிறகு, யாருக்கு மதிப்பு கொடுக்கப் படுகிறதோ, அவரை பூஜைக்குரியவராகக் கருதப்படுகிறது. இவர்கள் நம்முடைய பூஜைக்குரி யவர்கள், மரியாதைக்குரியவர்கள் என்று எப்பொழுதும் சொல்கின்றார்கள் அல்லவா. எனவே, உங்களுடைய சித்திரங்களுக்கும் மதிப்பு உள்ளது எனில், சைத்தன்யத்திற்கும் மதிப்பு உள்ளது என்பது நடைமுறை நிரூபணம் ஆகும். சைத்தன்யத்திற்கு மதிப்பு உள்ளதனாலேயே சித்திரங் களுக்கும் மதிப்பு உள்ளது. ஒருவேளை, சைத்தன்யத்திற்கு மதிப்பு இல்லையெனில் சித்திரங் களுக்கு எப்படி கிடைக்கும்? முதலில் குழந்தைகள் என்று எப்பொழுதும் தந்தை சொல்கின்றார். குழந்தைகள் இருவிதமாகப் பூஜிக்கப்படுகின்றார்கள், தந்தைக்கு ஒரு பூஜை மட்டுமே. எனவே, உங்களுடைய மதிப்பு தந்தையின் மதிப்பை விட அதிகமாக உள்ளது அல்லவா! இவ்வளவு சிரேஷ்டமான மதிப்பு கிடைத்துவிட்டது. எனவே, எப்பொழுது ஏதாவது எல்லைக்குட்பட்ட மதிப்பிற்கான விசயம் வருகிறதோ, அப்பொழுது, பரம ஆத்மாவிடம் இருந்து மதிப்பு கிடைத்து விட்ட பிறகு ஆத்மாக்களுடைய மரியாதை என்ன செய்யும் என்று சிந்திக்க வேண்டும். நான் இவ்வளவு செய்திருக்கிறேன் ஆனாலும் மரியாதை கொடுக்கவில்லை, கேட்கவே இல்லை என்று நினைக்கக் கூடாது. இப்படி சிந்திப்பது வீண் ஆகும். ஏனெனில், நீங்கள் எல்லைக்குட்பட்ட மரியாதைக்குப் பின்னால் ஓடுவீர்கள் அல்லவா, இந்த எல்லைக்குட்பட்ட எந்த ஒரு பொருளும் நிழலுக்கு சமமானது. நிழலுக்குப் பின்னாலே செல்வதால் எப்பொழுதாவது நிழலைப் பிடிக்க முடிகிறதா அல்லது அது முன்னால் போகின்றதா? எல்லைக்குட்பட்ட மதிப்பு, எல்லைக்குட்பட்ட பெயர் - இவை நிழல் ஆகும். இது மாயையின் வெயிலில் தென்படுகின்றது, ஆனால், இருப்பதோ ஒன்றும் இல்லை. பெயரும் உங்களுக்கு கிடைத்துவிட்டது, மதிப்பும் உங்களுக்கு கிடைத்திருக் கிறது மற்றும் பெருமையும் எவ்வளவு உள்ளது!. தன்னுடைய ஒவ்வொரு பெருமையையும் நினைவு செய்யுங்கள் மற்றும் யார் பெருமையில் இருக்க வைத்தது? தந்தை இருக்க வைத்தார். தந்தையினுடைய உள்ளம் சிம்மாசனம் ஆகும். அனைத்தையும் விட பெரியதிலும் பெரிய பெருமை இராஜ்ய பதவி ஆகும் அல்லவா! எனவே, உங்களுக்கு சிம்மாசனம், கிரீடம் கிடைத்து விட்டது அல்லவா! பரம ஆத்மாவினுடைய சிம்மாசனதாரி, இதைவிட பெரிய பெருமை என்ன உள்ளது!

சில நேரங்களில் நிர்ணயம் செய்வதில் ஒரு சிறிய தவறு செய்துவிடுகிறீர்கள். உண்மையான பெருமை, ஆன்மிகப் பெருமை எதுவோ, அது ஒருபோதும் அபிமானத்தின் உணர்வைக் கொடுக்காது. சில நேரங்களில் என்ன செய்கின்றீர்கள்? வருவதோ அபிமானம், ஆனால், இந்தப் பெருமையை தன்னிடம் வைத்திருக்க வேண்டும் என்று நினைக்கின்றீர்கள். இந்தளவு பெருமிதம் வைக்க வேண்டும் அல்லவா, பெருமையில் இருப்பது நல்லது என்று நினைக் கின்றீர்கள், ஆனால், பெருமையா அல்லது அபிமானமா, இதை நல்ல முறையில் சோதனை செய்யுங்கள். சில நேரங்களில் அபிமானத்தை பெருமிதம் என்று புரிந்து கொள்கின்றீர்கள் மற்றும் பிறகு பணிவாக இருப்பதில்லை. நீங்கள் தன்னுடைய பெருமையை உண்மையானது என்று நினைக்கின்றீர்கள், ஆனால், பிறர் இது அபிமானம் என்று புரிந்து கொள்கின்றார்கள். பிறகு, கொஞ்சம் ஏதாவது சொல்லிவிட்டார்கள் என்றால் உங்களுக்கு அவமானமாகத் தோன்றும். அபிமானம் உள்ளவர்களுக்கு அவமானத்தின் உணர்வு வெகு விரைவாக ஏற்பட்டு விடும். கொஞ்சம் யாராவது விளையாட்டாக சொல்லிவிட்டால் அவமானமாகத் தோன்றும். இது அபிமானத்தின் அடையாளம் ஆகும். இல்லை, நான் அப்படி இல்லை, அப்படி சொல்லக் கூடாது என்று யோசிப்பார்கள். சரியான நிர்ணயம் செய்யுங்கள். அந்த சமயம் தவறான நிர்ணயம் செய்துவிடுகிறீர்கள். யதார்த்தத் திற்கு பதிலாக கலப்படம் ஆகிவிடுகிறது, ஆனால், நீங்கள் அதை யதார்த்தம் என்று புரிந்து கொள்கின்றீர்கள். அப்பொழுது இவர்கள் மிகவும் நல்லவர்கள், ஆனால், பேச்சு, நடத்தை, அமர்வது, எழுவது போன்ற எல்லாம் அபிமானத்துடன் இருப்பது போல் தோன்றும் என்று சொல்வார்கள். இதைக் கூட யாராவது சொன்னால் அவமானத்தின் உணர்வு வந்துவிடும். எனவே, சுவமானம் மற்றும் அபிமானத்தினுடைய வித்தியாசத்தையும் சோதனை செய்யுங்கள். சுவமானம் எவ்வளவு பெரியது, புகழ் எவ்வளவு பெரியது, அந்த எல்லையற்ற பெயர், மதிப்பு மற்றும் பெருமையை சதா எமர்ஜாக (வெளிப் படையாக) வைத்திடுங்கள். மெர்ஜ்ஜாக (உள்ளுக்குள்) அல்ல, எமர்ஜ் செய்யுங்கள். எவ்வாறு நினைவில் அவ்வப்போது கவனக்குறைவு வந்துவிடுகிறது, அப்பொழுது நானே தந்தை யினுடையவர், நினைவு என்ன செய்வது . . . என்று கூறுகின்றார்கள். ஆனால், எமர்ஜ்ஜான சங்கல்பத்தினால் பிராப்தியின் அனுபவம் கிடைக்கின்றது. அதுபோன்றே ஒவ்வொரு தாரணையிலும் அலர்ட்டாக (விழிப்புணர்வு) இருங்கள், கவனக்குறைவானவராக ஆகாதீர்கள். ஏனெனில், சமயம் நெருக்கத்தில் வந்து கொண்டிருக்கின்றது, மேலும், நெருக்கத்தில் வரும் சமயம் என்ன தகவல் கொடுத்துக் கொண்டிருக்கின்றது? சமம் ஆகுங்கள், சம்பன்னம் ஆகுங்கள். எனவே, சமயத்தின் சவாலைப் பாருங்கள் மற்றும் அனைத்து பிராப்தி களிலும் சம்பன்னம் ஆகுங்கள். நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள சதா சர்வ பிராப்தி சொரூப ஆத்மாக்களுக்கு, சதா திருப்தி, சதா மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தன்னை சிரேஷ்ட பெயர், மதிப்பு, பெருமையினுடைய அதிகாரியாக அனுபவம் செய்யக்கூடிய சமீபமான ஆத்மாக்களுக்கு, சதா அனைவருக்கும் திருப்தியினுடைய அதிர்வலையின் ஒளி, சக்தியைக் கொடுக்கக் கூடிய மகிழ்ச்சியான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் : ஒவ்வொரு நொடியும் தன்னை நிறைந்திருப்பதாக அனுபவம் செய்து சதா பாதுகாப்பாக இருக்கக் கூடிய நினைவு மற்றும் சக்தி

சொரூபமானவர் ஆகுக.

பாப்தாதா மூலம் சங்கமயுகத்தில் என்னவெல்லாம் பொக்கிஷங்கள் கிடைத்திருக் கின்றனவோ, அவற்றால் தன்னை சதா நிறைத்துக் கொள்ளுங்கள், எந்தளவு நிறைந்த நிலை இருக்குமோ, அந்தளவு அலைக்கழிச்சல் இருக்காது, நிறைந்திருக்கும் பொருளில் வேறு எந்தப் பொருளும் வரமுடியாது. பொறுமை சக்தி அல்லது அமைதி சக்தி இல்லை, சிறிதளவு கோபம், ஆவேசம் வந்துவிடுகிறது என்று யாரும் கூற முடியாது. எப்பொழுது கவனக்குறைவு உள்ளதோ அல்லது இரட்டை பூட்டு போடப்படவில்லையோ, அப்பொழுதே ஏதாவது எதிரி கட்டாயம் வந்துவிடுகிறது. நினைவு மற்றும் சேவை என்ற இரண்டு பூட்டு போடுங்கள், நினைவு சொரூப மாக இருங்கள், அப்பொழுது சக்திசாலியாக ஆகி சதா பாதுகாப்பாக இருப்பீர்கள்.

சுலோகன்: உலகத்தை புதியதாக படைப்பதற்காக தன்னுடைய ஸ்திதியை பணிவு நிறைந்ததாக ஆக்குங்கள்.